Registered as a NewsPaper

பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 26 (08 - 04 - 1992) புதன்கிழமை ஓசை: 50

## இருதயநோயினால் வருடம் 1 கோடி 20 லட். பேர் இறப்பு

வருடந்தோறும் ஒரு கோடியே இருபது இலட்சம் பேர் இருதய நோயினால் மரணத்தைத் தழுவுகின்றனர் என்று இலங்கைக்கான உலக சுகாதாரப் பிரதிநிதி டாக்டர் யுஸ்மைன்ற் தெரிவித்தார். நேற்று அனுஷ்டிக்கப்பட்ட உலக சுகாதார தினத்தையொட்டி கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய போதே இதனை அவர் தெரிவித்தார். வருடாவருடம் இறக்கும் இந்த இருதய நோயாளர்களில் ஐம்பது சதவீதமானோர் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைச் சேர்ந்தோர் என்றும், இன்று இருதயநோயினால் மடிவோரின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதனால் இருதயநோய்பற்றிய அறிவை மக்களுக்கு ஊட்டு முகமாக கருத்தரங்குகள் வேறுபல செயற்திட்டங்களையும் இவ் [4-ம் பக்கம் பார்க்க]

# கொழும்பில் ராணுவ தலைமைப்பீடத்துடன் தமிழ்க் குழுக்கள் சதி ஆலோசனை

## வெளிவாரி விண்ணப்பம்

1991 / 92 கல்வியாண்டுக்கு வெளி மாணவர்களை பதிவு செய்வதற்குரிய விண்ணப்பங்கள் இம் மாதம் கோரப்பட (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிரான போரில் இணைந்து செயற்படுவது பற்றி ஆராய்வு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் சிறிலங்கா அரசாங்கத்துடன் இணைந்து நிற்கும் தமிழ்க்குழுக்களை எவ்வாறு பயன்படுத்துவதென்பது பற்றி கொழும்பில் நடைபெற்ற உயர்மட்ட மாநாடொன்றில் ஆராயப்பட்டது. இச் சதியாலோசனைக் கூட்டத்தில், இராணுவத் தளபதிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள், புலனாய்வுத் துறையினர், பாதுகாப்பு அமைச்சின் சட்ட ஆலோசகர், தமிழ்க் குழுக்களின் தலைவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தமிழ்க்குழுக்களுடனானசந்திப்பிற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா அழைப்பு விடுத்திருந்தார். இச்சந்திப்பு விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஒரு புதிய வியூக அமைப்பை ஏற்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்பட்டதாக அறிய வருகின்றது

இச்சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின்செயலாளர் எயார் மார்ஷல் வோல்டர் பெர்ணாண்டோ, கூட்டுப்படை தலைமை அலுவலக தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, பிராந்தியங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆரியசிங்கா, கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ் செனவிரத்ன, தேசிய உளவறிவுப்பிரிவு பொறுப்பாளர், (4 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களில்லா வெற்று தீவுகளில் அரசின் சிவில் நிர்வாகம்

### வடபகுதி தீவுகள் குறித்து பி. பி. ஸி. செய்தியாளர்

(கொழும்பு)

ஆட்களில்லாத வெற்றுத் தீவுகளில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் கொண்டு வரும் பணியில் சிறிலங்கா இராணுவம் ஈடுபட்டுள்ளதாக பி. பி. ஸி. செய்தியாளர் கிறிஸ் தோபர்மொறிஸ்தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தீவுப்பகுதியின்தற்போதைய நிலை குறித்து அவர் எழுதியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது: 72000 மக்கள் வாழ்ந்த ஊர்காவற்றுறையில் தற்பொழுது500க்கும் குறைவான மக்களே காணப்படுகின்றனர். ஏனையோர் அருகிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் யாழ். குடா நிலப்பகுதிக்குச் சென்றுவிட்டனர்.

ஊர்காவற்றுறை வெறிச்சோடிப்போய் இருக்கிறது கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் இடிந்த கட்டடங்களும் பயிர் செய்யப்படாத வெற்று வெளி வயல் நிலங்களும்தான் காணப்படுகிறது.

ஊர்காவற்றுறையில் இப்பொழுதும் தங்கியுள்ள மக்களில் பெரும்பாலானோர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இருதய நோயாளர் தரையில் உறக்கம்

### வைத்திய நிபுணர் அதிர்ச்சி

(கொழும்பு)

அறுவைச் சிகிச்சைக்குத் தயார் நிலையில் உள்ள இருதய நோயாளர் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் தரையில் உறங்குவதைக் கண்டு இருதய வைத்திய நிபுணர் பேராசிரியர் ஸ்ரான்லி யோன் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ நிலையத்தின் மார்பு சிகி... போதிய கவனிப்புத் தேவை என்றார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இருதய அறுவைச் சிகிச்சை தொடர்பான பயிற்சிக்கு வேலூர் மருத்துவமனையில் சிறந்த பயிற்சித் திட்டம் உள்ளது. பயிற்சியை விரும்புகிறவர்கள், தனியார் மருத்துவமனையைச் சேர்ந்தவர்கள் என்றாலும், அரச மருத்துவ மனையைச் சேர்ந்த...

## குடியேற்றங்களை விரைவு படுத்த அமைச்சர் மட்ட ஒருங்கிணைப்பு

(கொழும்பு)

மணலாறு மாவட்டத்தில் இருக்கும் பதவியா, கிகல்கொட பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை விரைவுபடுத்துவதற்காகவும், சிங்கள குடியேற்றவாசிகளுக்கு ஊக்குவிப்பு வழங்குவதற்காகவும் புனர் நிர்மாண, சமூகநல அமைச்சு, கல்வி அமைச்சு, மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சு, நெடுஞ்சாலைகள் அமைச்சு, தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சு என்பன இடம் பெற்றுள்ளன.

இப்பகுதியில் செயற்படும் ஒவ்வொரு திணைக்களத்திற் (4 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில்

## பலாலி, எறிகணை வீச்சு மூன்றுபொதுமக்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன் தினம் நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலால் ஏழாலையைச் சேர்ந்த மூன்று பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் பகல் ஒரு மணியிலிருந்து அரைமணிநேரமாக சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதலை நடாத்தினர். இந்த எறிகணைகள் தெல்லிப்பழை, மல்லாகம், ஏழாலை, குப்பிளான் ஆகிய (4 ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிப்பாளையத்தில் தமிழர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு மாவட்டம் பெற்றது.

தய நோயாளர் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் தரையில் உறங்குவதைக் கண்டு இருதய வைத்திய நிபுணர் பேராசிரியர் ஸ்ரான்லி யோண் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ நிலையத்தின் மார்பு சிகிச்சைப் பிரிவுத் தலைவரும் பேராசிரியருமான ஸ்ரான்லி யோண் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியைப் பார்வையிட்டபின் இவ்வாறு கருத்துத் தெரிவிக்கையில் இருதய நோயாளர்களுக்கு அறுவைச் சிகிச்சைக்கு முன்னும் பின்பும் தெரிவிக்கையில், இருதய அறுவைச் சிகிச்சை தொடர்பான பயிற்சிக்கு வேலூர் மருத்துவமனையில் சிறந்த பயிற்சித் திட்டம் உள்ளது. பயிற்சியை விரும்புகிறவர்கள், தனியார் மருத்துவமனையைச் சேர்ந்தவர்கள் என்றாலும், அரச மருத்துவ மனையைச் சேர்ந்த டாக்டர்கள் என்றாலும் விண்ணப்பிக்கலாம். அவர்களுக்கு குறைந்த செலவில் பயிற்சி வழங்கப்படும் என்றார்.

பேராசிரியர் ஸ்ரான்லி யோண் கொழும்பு பெரியஆஸ்பத்திரியில் இருதய நோயாளர்களையும் பரிசோதித்தார்.

# போலிச்சான்றிதழ் வழங்கிய 95 பேர் மீது நடவடிக்கை

[கொழும்பு]

தொழில் வாய்ப்புக்களுக்காக போலி கல்விச்சான்றிதழ் வழங்கிய 95 பேர் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

க. பொ. த. சாதாரண மற்றும் உயர்தரபரீட்சை பெறுபேறுகள் தொடர்பாகவே மேற்படி போலிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்புக்கு அப்பாலுள்ள நீதிமன்ற அதிகாரியொருவரும் அரசாங்க சேவையைச்சேர்ந்த கணக்காளர், பாடசாலை அதிபர், ஆசிரியர், பொலிஸ் அதிகாரி, எழுதுவினைஞர் முதலானோர் இவ்வாறான போலிச் சான்றிதழ்கள் வழங்கி உத்தியோகம் பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# ஜேர்மனியில் வெளியார் மீது தாக்குதல் அதிகரிப்பு

(பேர்லின்)

ஜேர்மனியில் வதியும் வெளிநாட்டவர்கள்மீது தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாண்டின் முதல் மூன்று மாதகாலப் பகுதியிலும் நடந்துள்ள இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் முன்னைய ஆண்டுகளைவிட நானூறுசத விகிதம் அதிகமானவை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாண்டின் முதல் மூன்று மாதகாலப் பகுதியிலும் அறுநூறு கிரிமினல் தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

# தியாகச்சுடர் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள்

கொடிகாமம் வட்டவைப் பிரிவில் வரணி சுட்டிபுரம் அம்மன் கோவிலில் இன்று தியாகச்சுடர் அன்னைபூபதி நினைவாக அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

அடையாள உண்ணா விரதம் காலை 8.00மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை இடம் பெறும் நினைவஞ்சலிக் கூட்டம் பிற்பகல்7 00மணிக்கு ஆரம்பமாகும்.

நினைவஞ்சலிக் கூட்டத்தில் வெற்றிச் செல்வன், வாஞ்சிநாதன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். இதனையடுத்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

(கொழும்பு)

மணலாறு மாவட்டத்தில் இருக்கும் பதவியா, வெலிஓயா பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை விரைவுபடுத்துவதற்காகவும், சிங்கள குடியேற்றவாசிகளுக்கு ஊக்குவிப்பு வழங்குவதற்காகவும் அமைச்சு மட்ட ஒருங்கிணைப்புக் குழுவொன்றை சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா நியமித்துள்ளார்.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள அமைச்சு மட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் காணி நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சு, புனர்வாழ்வு புனர் நிர்மாண, சமூக நல அமைச்சு, கல்வி அமைச்சு, மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சு, நெடுஞ்சாலைகள் அமைச்சு, தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சு என்பன இடம் பெற்றுள்ளன.

இப்பகுதியில் செயற்படும் ஒவ்வொரு திணைக்களத்திற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில்

# தமிழரின் வீடுகளில் சிங்களவர் குடியேற்றம்

(வவுனியா)

வவுனியாநகரப்பகுதியிலும், நகர எல்லைப் பகுதியிலும் இராணுவத்தினராலும், பொலிஸாரினாலும் சிங்கள, முஸ்லிம் மக்கள் தமிழர்களின் வீடுகளில் குடியமர்த்தப்படுகின்றனர்.

சிறிலங்கா இராணுவ நட

(4 ஆம் பக்கம் பார்க்க)

நேற்று முன்தினம் பகல் ஒரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# செட்டிப்பாளையத்தில் தமிழர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு மாவட்டம் செட்டிப்பாளையம் பகுதியைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் அப்பாவி தமிழர் ஒருவரை சுட்டுக் கொன்றுள்ளனர் இச்சம்பவம் கடந்த வியாழனன்று நடைபெற்றது.

இச் சம்பவத்தின் போது தேவசகாயம் சந்திரலிங்கம் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன,

வன்னிப்பகுதி காடுகளில்

# மரம் வெட்டவேண்டாம் அரசியல்'பிரிவு கோரிக்கை

வன்னிப் பிராந்திய காடுகளில் விறகுக்காக மரங்களை வெட்ட வேண்டாம் என தமிழீழ விடுதலைப்புலிகளின் வன்னிப் பிராந்திய அரசியல் பிரிவு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இயற்கை வளங்களான காடுகளை அழிப்பதால் எதிர்காலத்தில் மழை இல்லாமல் போய்விடும் அபாயம் ஏற்படும் என்றும் இதனால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படும் என்றும் ஆகையால் காடுகளை அழிக்கும் செயல்களில் ஈடுபட வேண்டாம் என மக்களுக்கு அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# தமிழர் படுகொலைகள் குறித்து ஐ. நா. செயலாளருக்கு மகஜர்

[லண்டன்]

ஆங்கிலேய ஆதிக்கம் இலங்கைத் தீவிலிருந்து அகன்ற நாள் முதல் காலத்திற்குக் காலம் ஏற்பட்டுவரும் வன்செயல்களினால் தமிழ் மக்கள் தாக்கப்படுவதும் குறிப்பாக 1956க்குப் பின் 35.000 தமிழர்கள் கொல்லப்பட்டும், 3000 பேர் வரையில் காணாமற் போயும், ஐந்து லட்சத்திற்கும் அதிகமானோர் அகதிகளாகவும் வாழும் தமிழ் மக்களின் நிலையைச் சுட்டிக்காட்டி ஐ. நா. சபையின் செயலாளர் பூட்டர்ஸ் பூட்டர்ஸ் காலிக்கு மனுவொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களும் அவர்களது நண்பர்களும் கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ள இம் மனுவில் மேலும்,

தமிழர் தலைவர்களோடு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களையும் சமாதான

[4 ஆம் பக்கம் பார்க்க]

# நான் குற்றம் இழைத்திருந்தால் அரசு ஏன் அப்பொழுது கூறவில்லை

## கேள்வி எழுப்புகிறார் உடுகம்பொல

அரசு மனித உரிமைகளை மீறிய தாகக் குற்றச்சாட்டுக்களை முன் வைக்கும் மனித உரிமை அமைப்புகளின் அறிக்கைகளில் எனது பெயர் முனைப்பாக உள்ளது. ஒரு அரச ஊழியன் என்ற கோதாவிலும், பொலிஸ் படையைச் சேர்ந்தவர் என்ற முறையிலும் இக் குற்றச் சாட்டுகளுக்கு எதிராக அப்போது சுதந்திரமாகக் கருத்து வெளியிட முடியவில்லை. எனக்கெதிராகச் சுமத்தப்பட்ட குற்றங்களை அரசு ஏற்றிருக்கலாம். அல்லது மறுத்திருக்கலாம். இல்லாது போனால் என் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை அரசு விசாரித்திருக்கலாம். அரசு என் மீது குற்றம் சுமத்துவதற்கு நான் இக்காலப் பகுதியில் ஒரு குற்றம் தானும் இழைக்க வில்லை.

இவ்வாறு பிரேமதாசா உடுகம்பொல கடந்த சனியன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: விஜெயதாசா லியனாரச்சி மரணம் தொடர்பான சட்ட விசாரணையின் போது, லியனாரச்சி மரணம் பற்றியும், அவரது மரணத்துக்கு பிந்திய சட்ட விரோத நடவடிக்கைகள் பற்றியும் பல விடயங்கள் வெளிவந்துள்ளன. விசாரணையின் போது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், தகவல்கள், தரவுகளைக் கொண்டு இந்தக் கொலைக்கு யார் காரணஸ்தர் என்பதை சட்டமா அதிபர், சட்டத்தை அமுல் படுத்தும் அமைப்பு போன்றவை விசாரித்துக் கண்டறிய வேண்டும்.

-இவ்வாறு இவ் வழக்குத் தொடர்பான சட்ட விசாரணையின் போது நீதியரசர்கள் தீர்ப்பு வழங்கியதாக உடுகம்பொல தனது அறிக்கையில் சுட்டிக் காட்டுகிறார்.

மரணமானவரான லியனாராச்சி பொலிஸ் காவலில் இருந்த சமயம் அவரைத் தடுத்து வைத்திருக்க உத்தரவு என்னால் வழங்கப்பட்டதா

[4 ஆம் பக்கம் பார்க்க]

சுதந்திரக்கட்சி உறுப்பினர் கொலை:

# நீதி விசாரணை கோருகிறார் அனுரா பண்டாரநாயக்கா

(கொழும்பு).

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஐ.தே.க உருவாக்கிய கறுப்புப்பூனை என்னும் கொலைகாரப் படையினால் கொல்லப்பட்டது குறித்து நீதி விசாரணை தேவை எனஅனுராபண்டாரநாயக்கா கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் உடுகம்பொல, சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 60பேர் கறுப்புப் பூனைகளால் கொல்லப்பட்டதாக அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்தே திரு. அனுராபண்டாரநாயக்க நீதி விசாரணைக்கான கோரிக்கையை விடுத்துள்ளார். கட்சிச் சார்பற்ற மூன்று நீதிபதிகளைக்கொண்ட விசாரணைக் குழுவொன்று உடுகம்பொலவின் குற்றச்சாட்டுகள் பற்றி ஆராய வேண்டும் என்றும், அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, லண்டனிலுள்ள சகல மனித உரிமை ஸ்தாபனமும், சர்வதேச நீதிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறி விட்டது

ஒரு தொகைப்பணத்துடன் பை ஒன்று சில பொருட்களுடன் கல்வியங்காட்டுக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (2433)

**HAPPY Tailors**

புதுவருடத்தை முன்னிட்டு வாடிக்கையாளருக்கு ஓர் நற்செய்தி! இன்றைய நவநாகரிக வாலிபர்களின் சேர்ட்,ஜீன்ஸ். சோர்ட்ஸ் என்பன அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப குறைந்த கட்டணத்தில் தைத்துக் கொடுக்கப்படும். சேர்ட், ஜீன்ஸ், Tசேட் என்பன குறைந்த விலையில் ரெடிமேற்ஆகவும்பெற்றுக்கொள்ளலாம். ஹப்பி - தையல் அகம் கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். (2432)

### பிராந்தியரீதியாக சுதந்திரக்கட்சி கருத்தரங்கு

(கொழும்பு)

பிராந்திய மட்டத்தில் கருத்தரங்குகளை ஏற்பாடுசெய்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்போதைய அரசியல் நிலை குறித்து விளக்கம் அளித்து வருகின்றது. இதேவேளை கூட்டுச் சேர்ந்துள்ள ஏனையகட்சிகளையும் இணைந்து பிராந்திய வேலைகள் தொடர்பான திட்டமிடலும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதாக கட்சியின் பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

### பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியைச் சேர்ந்த புவனேஸ்வரி செல்லத்துரை (545350327V) என்பவரது அடையாள அட்டை கோ.கருணாகரன் என்பவரால் நல்லூர் மேற்குவீதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளவும்.

### தோல் பதனிடல் முயற்சி

தமிழீழ ஆய்வு நிறுவனம் தோல்பதனிடல்கைத்தொழில் முயற்சியில் ஈடுபடவுள்ளது. நாவற்குழிப் பகுதியில் இம் முயற்சியை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டு அதற்கான ஆரம்ப வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

## கரும்பை அழித்தவர் கத்திக்குத்தில் காயம்

கரும்புத் தோட்டத்தை அழித்தவர் கத்திக்குத்துக்கு இலக்காகி பலத்த காயமடைந்திருக்கிறார்.

சங்கானையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது க. யோகன் (வயது 36) என்பவர் தனது தந்தையின் கரும்புத் தோட்டத்தை வெட்டி அழித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த தந்தையார் மேற்படி தனது மகனை கத்தியால் குத்தியுள்ளார். பலத்த காயமடைந்த மகன் தற்பொழுது யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஆயிரம் யானை கொன்றால் பாடிடும் காவியமோ?
ஆண்டவன் தீமைவென்ற காதையின் ஓவியமோ?
தபக்காலத்தை முன்னிட்டு

## கல்வாரிப் பரணி

பக்தி இசை உரை நாடகச் சித்திரம்

காலம்: 1992 ஏப்ரல் 10, 11, 12 (வெள்ளி, சனி, ஞாயிறு)

**தினமும் மாலை 6. 45 மணிக்கு**

இடம்: மன்ற அரங்கு: 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தயாரிப்பு:

**திருமறைக் கலாமன்றம்**

★ ஆசனப் பதிவுக்கு அலுவலகத்துடன் முன்கூட்டித் தொடர்பு கொள்ளவும். (சி-4229)

## மேதினப் போட்டிகள்

எதிர்வரும் தொழிலாளர் தினமான மேதினத்தை முன்னிட்டு தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் பிரிவான பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைமையில் பின்வரும் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

1. பனையேறல்
2. குட்டான் இழைத்தல்
3. கிடுகு பின்னல்

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் 11 - 4 - 92 இற்குமுன் அயலிலுள்ள தெ. ப. பொ. கூ. சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

வெற்றி பெறுவோர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம்.

(4230)

## யாழ் - மாவட்ட இறைச்சிக் கடைகள் வியாபாரிகள் சங்க ஆண்டுக் கூட்டம்

10 - 04 - 1992 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சின்னக்கடை வடக்கு வீதி, இல: 9 இல் உள்ள சங்கக் காரியாலயத்தில் நடைபெறும்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. திவகலாலா, யாழ் - மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம், தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. கா. நடேசன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

## 60-ம் நாள் நினைவஞ்சலி



**கப்டன் கீர்த்தியப்பா (கீர்த்தி ஐயா)**
(அன்ட்று ஜோசப்)

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 04 - 02 - 1928 | 08 - 02 - 1992 |

உறுதியில் உறுதியாய்
உரம் கொண்ட நெஞ்சும்
என்றும் நிமிர்ந்த நடையும்
சிரித்த முகமும் பல் துறைச்
சிந்தனையும் ஒருங்கே பெற்று
தேசத்திற்குத் தேவை விடிவு என,
தமிழீழ விடுதலைப் பணியில்
தமிழீழ ஆய்வு நிறுவன வளர்ச்சியில்
ஓயாது உழைத்த உங்கள் நினைவு
எங்கள் உள்ளத்தை நிறைத்தே நிற்கிறது
தேசத்தை நேசித்து, சுற்றமும் சுகமும்
தேசத்திற்காய் துறந்தே வாழ,
இந்த வயதில் இந்த உறுதி
இவருக்கு வந்தது எப்படி? - என்றே,
இன்று எங்களை வியந்திட வைக்கிறது.

(சி 4237) - தமிழீழ ஆய்வு நிறுவனம் -

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



வீர ஜனனம்
13 - 05 - 1968
வீர

உலகவங்கி

## இரகசிய அறிக்கை எதிர்க்கட்சிகளிடம்

### அரசு விசாரணை

(கொழும்பு)

அரச வங்கிகளைப் பற்றிய உலகவங்கியின் அறிக்கை ஒன்று எவ்வாறு எதிர்க்கட்சிகளின் கைக்குக் கிடைத்தது என்பது குறித்து அரசு விசாரித்து வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்தவே இந்த ஆவணம் எதிக்கட்சிகளுக்கு வழங்கப்பட்டதாக அரச உயர் அதிகாரிகள் தெரிவிகின்றனர்.

மக்கள் வங்கியில் உள்ள ஒரு மூத்த உயர் அதிகாரி இந்த அறிக்கையை எதிர்க்கட்சிகளுக்குக் கொடுத்திருக்கலாம் என்று சந்தேகிக்கப் படுகிறது.

## ஓராண்டை நினைவு கூருகின்றோம்

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 28 — 06 — 1973 |  | 21 — 03 — 1ь91 |

**வீரவேங்கை காந்தன்**
(செ. செல்வக்குமார்)
திதி: 08. 04 1992

பருத்தித்துறை உன் ஊராம்
செல்வகுமரன் பேராம்
வேங்கையாய் மாறினீராம்
காந்தன் உன்வேங்கைப் பெயராம்
கழுத்திலே நஞ்சைக் கட்டி
கரத்திலே ஏகே யோடு
களத்திலே சமர் புரிந்த
கரந்தடிப் புலிதான் காந்தன்!

எங்கள் செல்லக்குட்டியே! ஆண்டொன்று சென்றாலும் ஆறாது எங்கள் துயர்.

சிலாபத்துறையில் இவருடன் வீரச்சாவை தழுவிக்கொண்ட ஏனைய போராளிகளுக்கும் எமது நினைவஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம்.

தற்போதைய முகவரி:-
N. கனகலிங்கம் அருள் மொழி,
இல 33 ஈச்சமோட்டை வீதி.
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்
பாலையூர்
(சி-4124)

## நினைவு கூருகின்றோம்.

**1992. 04. 08**

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார், பூந

நடைபெற்று வருகின்றன. மாட்டுத் தோல் பதனிடல் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து தோல் பதனிடல் கைத்தொழிலை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. தோல் பதனிடலுக்குத்தேவையான ஆவரசம் பட்டைகள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

## குடும்ப சுகாதார ஊழியர் அதிகரிப்பு

(கொழும்பு)

குடும்ப சுகாதார ஊழியர்களின் எண்ணிக்கை ஆறாயிரத்திலிருந்து16 ஆயிரமாக அதிகரிக்கப்படவுள்ளது. அவர்களின் சம்பளம்பற்றி மீளாய்வுசெய்ய விசேஷ குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இத் தகவலை சுகாதார, மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

## ராம நவமி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சிறீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலில் எதிர்வரும் சனிக்கிழமை ராமநவமி உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது. பக்தஅடியார்கள் கோயிலுக்கு தரிசனம் செய்து அருள்பெறுமாறு தர்மகர்த்தாசபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பரிசளிப்பு விழா

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான உடுவில் பிரதேசமட்ட பரிசளிப்பு விழா மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் இன்று புதன்கிழமை மாலை6 மணிக்கு நடைபெறவுள்ளது.

திரு. கா. நடேசன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

மற்றும் சுகாதார வைத்திய உணவுப் பரிசோதகர், கால்நடை வைத்திய அதிகாரி போன்றவர்களும் கலந்து இறைச்சிக்கடை வியாபாரம் சம்பந்தமான பல்வேறு விடயங்கள் பேசப்பட இருப்பதால் அனுமதி பெற்ற சகல ஆட்டு மாட்டு இறைச்சிக்கடை வியாபாரிகள் தவறாமல் கலந்து கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

க. சி, கிருஷ்ணன்,
செயலாளர்.

(சி 4234)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை, தலைமை அலுவலகம்

## பதவி வெற்றிடம்

(அ) இணைப்பு அதிகாரி - கடற்றொழில்
(ஆ) உதவி அலுவலர் - கடற்றொழில்

மேற்குறிப்பிட்ட பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்கூறிய பதவிகளுக்கு பின்வரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தோர் மட்டும் விண்ணப்பிக்கவும்.

1. மருதன்கேணி
2. பருத்தித்துறை
3. சாவகச்சேரி
4. யாழ்ப்பாணம்
5. நல்லூர்
6. தெல்லிப்பளை
7. சண்டிலிப்பாய்
8. சங்கானை

இலங்கை கடற்றொழில் அமைச்சின் கீழுள்ள கடற்றொழில் பயிற்சிக் கல்லூரியில் பயின்றவர்கள் விரும்பப்படுவர். அத்துடன் தகுந்த கல்வித் தகைமையும் கடற்றொழில் அனுபவமும், ஆற்றலும், சேவைமனப்பான்மையுமுள்ளோர் விரும்பப்படுவர்.

விண்ணப்பங்கள் யாவும் 20-04-92 க்கு முன்பாக தலைமைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். நேர்முகப் பரீட்சை 24-04-92 முற்பகல் 10.00மணிக்கு நடைபெறும்.
தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

-கௌரவ செயலாளர்

73 கண்டிவீதி,
யாழ்ப்பாணம்,
04-04-92

(சி/4236)



வீர மரணம்
10 - 01 - 1992

மாண்டு போய் மீண்டும் மலர்ந்து விட்ட மாவீரன் துணைப்படை வீரர்

## (ரவி) ரவீந்திரன் சுப்பிரமணியம் கல்லுவம்

விடுதலை வேண்டும் என்றே தம்பி
வீரமுடன் சென்றாயோ?
தனி ஈழம் நாம் பெறவே தம்பி
தமிழ்த் தாகம் கொண்டாயோ?
நாடாளும் ஆசையில்லை உனக்கு தம்பி
நாடு வாழும் ஆசையில் நீ மறைந்தாயோ?
பேருந்துவண்டிகளைபீற்றச்செலுத்தியவன்தம்பி நீ
சீர்மிகு கலையில் சிறந்து பேர் பெற்றாயோ?
ஏழு வருடம் என் தம்பி
தமிழீழ விடுதலைப் புலிகளின் துணையானாய்
எட்டாவது வருட ஆசையில் தம்பி
மீண்டும் நீ தொட்டிலில் ஆடும் குழந்தையானாய்
மாண்டு போய் என் தம்பி
இன்று மீண்டும் என் வீட்டில் மலர்ந்து விட்டாயே!
உன் பெரு உருவம் அழிந்தாலும் தம்பி
உன் உயிரும் உன்சிறு உருவமும் எம்மிடம்
இருப்பது பெரும் மகிழ்ச்சி!
நீயே இன்று உன் வரலாறையும் உன் தோழர்
களின் வரலாறையும் படிக்கப் போறாய்
பெருமையுடன் நாம் இருந்து பெரும்
மகிழ்ச்சியுடன் பார்ப்போமே!

மாண்டுபோய் மீண்டும் மலர்ந்து விட்ட மாவீரன் (ரவி) ரவீந்திரன் பெரும் உருவத்தின் 90 ஆம் நாள் இன்றாகும். இவன் மீண்டும் குழந்தையாய் மலர்ந்து விட்டதை நினைத்து பெரும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் கொள்ளும் அன்பு அப்பா, அம்மா, அண்ணா, மசோ அக்கா, கலா அக்கா, ரஞ்சி (பாஸ்கரி) அக்கா, மீண்டும் மலர்ந்து விட்ட ரவீந்திரன், அத்தான், உற்றார், உறவினர், உயிர் நண்பர்கள்.

கல்லுவம்,
கரவெட்டி.

[2424]

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார், பூநகரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய -

**குமா** (இரத்தினம் குமாரசாமி - கறுக்காத்தீவு பூநகரி, மன்னார்.)

1987 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**ஈசன்** (குமாரசேகரம் கமலநாதன் திருக்கோணமலை.)

யாழ். கோப்பாய்ப் பாலத்தடியில் உலங்கு வானூர்தியின் மூலம் தரையிறங்க முயன்ற சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**சிவா** (சுப்பையா சிறி ராஜேஸ்வரன் - வவுனியா.)

**சுருளி** (மகாலிங்கம் விஜயராசா - சாவற்காடு, மானிப்பாய்.)

**செனித்** (நடராசா ஜெயப்பிரகாஷ் - நயினாதீவு.)

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, கிண்ணையடிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய -

**யோசப் / மாமா** (நாகமணி சித்திரன் - கிரான், மட்டக்களப்பு )

இதே சம்பவத்தின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். சுதர்சன்** (சச்சிதானந்தம் தர்மன் புஷ்பராசா - கிரான், மட்டக்களப்பு.)

மட்டக்களப்பு, கிகிலிவெட்டைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**நிக்சன்** (பிள்ளையான் சர்வராசா - சந்திவெளி, மட்டக்களப்பு.)

1989 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். குட்டி / கண்ணன்** (மருதப்பு யோகேஸ்வரன் - 3 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு.)

**கஜன்**

ஆகியோரை இந் நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/4235)

நல்லூர் பிரதேச நூலகம் யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

உன் சொல்லுக்கு ஒப்ப செயலையும்,
செயலுக்கு ஒப்ப சொல்லையும் இணக்கச் செய்
- வில்லியம் ஷேக்ஸ்பியர் -

**ஈழநாதம்**

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 08-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த பெ என் 05

## அதிகரித்த இடைவெளியில் சொல்லும் செயலும்

அவசர காலச் சட்டத்தின் கீழ் காடு அழித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் காடுகள் தொடர்பாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலப் பிரமாணங்களுக்கு அமைய காடுகளை அழிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க ஆயுதப்படையினருக்குப் பணிக்கப்பட்டுள்ளது. இதில் காடு அழிப்பு முயற்சியில் ஈடுபடுபவரை சுட்டுக்கொல்லும் அதிகாரமும் ஆயுதப்படைகளுக்கு உண்டு

மேலும், காடுகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக 137 காடுகள் பாதுகாப்புப் பிரதேசங்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. மற்றும் 68 காடுகள் உத்தேச பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பாதுகாப்பு பகுதியாகப் பிரகடனம் செய்யப்படும் எந்தவொரு பகுதியிலும், தீவைப்பது, மரங்கள் வெட்டுவது, தற்காலிக அல்லது நிரந்தர வதிவிடம் அமைப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காடுகள் தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதியும், அவரது அரசாங்கமும் எடுத்துள்ள நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கன. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பது, பராமரிப்பது தொடர்பாகக் கூறி மேற் கொள்ளப்படும் இந் நடவடிக்கையானது இன்றைய நிலையில், மிகவும் அவசியமானதாகும்.

காடு அழித்தல் சூழலின் சமநிலையை வெகுவாகப் பாதிக்கும் ஒரு நடவடிக்கையாகும். இதன் காரணமாக பூமியின் தட்ப, வெப்ப நிலைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படலாம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இந் நிலையில், இவ் வருடம் இலங்கையில் ஏற்பட்ட கடும் வரட்சிக்கு பல்வேறு வானிலை நிகழ்வுகள் காரணமாக இருப்பினும், காடுகள் அழிக்கப்பட்டமையும் மழை வீழ்ச்சிக் குறைவிற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், காடுகளை அழிப்பதைத் தடை செய்ய மேற்கொள்ளப்படும் கடும் நடவடிக்கையானது அவசியமாகின்றது என்பது காலம் கடந்து ஏற்பட்ட சிந்தனையாயினும், அவசியமானது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இக் காடு அழிப்பு நடவடிக்கைகளில் எந்த அளவிற்கு சிறிலங்கா அரசாங்கம் பற்றுக் கோடாக இருக்கப்போகிறது?

காடு அழிப்பதை தடை செய்யும் சட்டத்தை அவசரகாலச் சட்டப் பிரமாணங்களுக்குள் நிறை

# பாதுகாப்புப் பிரதேசங்களாக 137 காடுகள் பிரகடனம்

(கொழும்பு)
ஏற்கனவே சிறிலங்கா ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசர காலப் பிரமாணங்களுக்கு இணங்க நூற்றி முப்பத்தேழு காடுகள் பாதுகாப்பு பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. மற்றும் அறுபத்து எட்டு காடுகள் உத்தேச பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனமாக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள காடுகளுக்குள் பிரவேசம் செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என கொள்கைத் திட்டமிடல் ராஜாங்க அமைச்சர் விமல் விக்கிரமசிங்க நிருபர்களிடம் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு அல்லது தனியார் துறைக்கு சொந்தமான எந்தக் காட்டுப் பகுதியையும் பாதுகாப்பு பகுதியாகப் பிரகடனம் செய்யும் அதிகாரம் மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபைத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு பகுதியாக பிரகடனம் செய்யப்படும் எந்தவொரு பகுதியிலும் தீ வைப்பது, மரங்கள் வெட்டுவது, தற்காலிக அல்லது நிரந்தர வதிவிடம் அமைப்பது அனைத்தும் முற்றாகத் தடைசெய்யப்படும்.

இவற்றை மீறுவோருக்கு இரண்டு தொடக்கம் பத்து வருடம் வரையான சிறைத் தண்டனையும் நூறு ரூபா தொடக்கம் ஒரு இலட்சம் ரூபா வரையிலான அபராதமும் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படலாம்.

கிராம சேவையாளர்களும் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு படையின் அங்கத்தவர்கள் அனைவரும் வனபரிபாலகர்களாக செயற்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதலாளித்துவ கட்சிகள் இனவாதத்திற்குத் தூபம்
### சோமவன்சா கண்டனம்

(கொழும்பு)
இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்த முதலாளித்துவக் கட்சிகள் இனவாதத்திற்குத் தூபமிட முயற்சிப்பதைத் தடுக்க மக்கள் முன்வரவேண்டும் என்று ஜே. வி. பியின் புதிய தலைவர் சோமவன்ச அமரசிங்கா அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியான ஐ.தே. கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் சகபாடிகளும் இனவாதத்தைத் தூண்டி விட்டுச் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று முஸ்லிம் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுடன் பேரம் பேசி ஆட்சியை அமைக்கின்றன என்று அந்த அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

முஸ்லிம், தமிழ் முதலாளித்துவக் கட்சிகளும் இனவாதத்தைத் தூண்டி விட்டு இரு இனத்தவர்களின் வாக்குகளை பெறுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லையில் திட்டமிட்டவாறு பரீட்சை நடைபெறுகின்றது

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவுமாவட்டத்தில் 1991 ம் ஆண்டிற்குரிய கர்நாடக, சங்கீத பரதநாட்டிய செயல்முறைப் பரீட்சைகள் யாவும் நடைபெற்று முடிந்தன.

க. பொ. த உயர்தர விசேட பரீட்சை திட்டமிட்டபடி நான்கு பரீட்சை நிலையங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. மு/வித்தியானந்தா கல்லூரி முள்ளியவளையில் மூன்று பரீட்சை நிலையங்களும், மு/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் ஒரு பரீட்சை நிலையமும் இயங்குகின்றன.

சிறுவர் பாதுகாப்பு நிதி நிறுவனம் காகிதாதிகள், வினாத்தாள்கள், விடைத்தாள்கள் பொதிகளை ஏற்றி இறக்குவதற்குரிய பொறுப்பை ஏற்று செயற்படுகின்றது.

## தியாகி அன்னை பூபதிக்கு காவற்றுறையினர் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)
தாயக விடுதலைக்கு வீறு சேர்க்கும் முகமாக உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தி தியாக மரணம் அடைந்த தியாக தீபம் அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவாக தமிழீழக் காவற்றுறையினரும் நினைவஞ்சலி நிகழ்ச்சிகளை நடாத்தியிருக்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை தமிழீழக் காவற்றுறை பயிற்சிக் கல்லூரி மைதானத்தில் விசேட அஞ்சலி இடம்பெற்றது. விசேடமாக அமைக்கப்பட்ட அரங்கில் காவற்றுறையினர் தயரித்து வழங்கிய கலை நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றன. அதே வேளை அனைத்து காவற்றுறைப் பணிமனைகளிலும் அன்னை பூபதியின் உருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது.

(க,ச)

## கூட்டுறவு குறித்து அமைச்சரின் புதிய திட்டம்

(கொழும்பு)
கூட்டுறவு இயக்கத்தை ஆக்கபூர்வமான தேசியபொருளாதார இயக்கமாக மாற்றுவதே தனதுநோக்கமாகுமென அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி கூறியுள்ளார் அவர் மேலும் கூறுகையில் கூட்டுறவுத் துறையில் நிலவும் ஒழுங்கீனங்கள் மற்றும் ஊழல்கள், மோசடிகள் என்பவற்றை நீக்குவதற்கு மிகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஓய்வூதியக் கொடுப்பனவு

(புங்குடுதீவு)
புங்குடுதீவு, நயினாதீவுபலநோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுவோருக்கான பங்குனி மாதக் கொடுப்பனவு தற்போது யாழ். அடைக்கல மாதா கோயிலுக்கருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் வழங்கப்படுகின்றது. கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் இக்கொடுப்பனவு பணமாக வழங்கப்படுவதாக கிராமிய வங்கி முகாமையாளர் து. வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (22)

## 'சத்தியாக்கிரகம்' படத்திற்கு எதிராக சத்தியாக்கிரகம்

(மாத்தளை)
கனடா நாட்டின் சினிமா நிறுவனம் தயாரிக்கும் 'சத்தியாக்கிரகம்' என்ற படத்தின்படப்பிடிப்புக் கெதிராகத் தெய்வந்துறையில் சத்தியாக்கிரகம் இடம்பெற்றது.

தெய்வந்துறையில் இந்தப் படப் பிடிப்பிற்காக இந்துப் பின்னணியைச் சித்தரிக்கும் ஷெட் போடப்பட்டது ஷெட்டில் இந்துக் கோயில், தமிழ் பள்ளிக்கூடம் தமிழில் பெயர்ப் பலகைகள், கடைகள் ஆகியன இடம்பெற்றன. இதனைக் கொண்டு தென்னிலங்கையில் இந்த இடத்தில் முன்பு ஒருதமிழ்க்கிராமம் இருந்ததாகப் பின்னர் புலிகள் பிரச்சாரம் செய்யக் கூடும் என்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

மல்கம் பொஸ் எழுதிய கணேஷ் என்ற நாவலை ஜெவ்வர்சன் லூவிஸ் 'ஒடினரி மஜிக்' என்ற பெயரில் படமாக்கவிருந்தார்.

முப்பது பேர் அடங்கிய கனடா சினிமாக் குழு மார்ச் 27 இல் தெய்வந்துறையில் முகாமிட்டது. தொந்துவ குமார ராஜ மகாவிகாரை விகாராதிபதி வண. தர்மசேன மகாதேரோ, தெய்வந்துறை பிரதேச சபைத் தலைவர் சரத்குணவர்தனா தலைமையில் இரண்டு லொறியில் வந்திறங்கிய சிங்களவர் மார்ச் 28 காலையில் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டனர். இதனால் இந்த இடத்தில் படப்பிடிப்பு கைவிடப்பட்டது.

தெய்வந்துறைக்கு அருகாமையில் உள்ள டெகல கிராமத்துக்குப் படப்பிடிப்பு மாற்றப்பட்டது. கத்தி, கோடரி, உலக்கைகளுடன் அங்கு கூடிய மக்கள் படப்பிடிப்பு நடைபெறவிருந்த இடத்துக்குத் தீ வைக்கப் போவதாக மிரட்டினர். இங்கும் படப்பிடிப்பு கைவிடப்பட்டது.

சத்தியாக்கிரகம் படப்பிடிப்புக்கான அனுமதியை கனடா நிறுவனம் தேசிய சினிமாக் கூட்டுத்தாபனத்திடமும், வெளியுறவு அமைச்சிடமும் பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# அயோத்தி செல்லும் பாராளு. குழுவில் பாரதீய ஜனதா பங்கேற்க மறுப்பு

## அகதி முகாமில் தீ விபத்து

(சென்னை)
பள்ளப்பட்டி அகதிமுகாமில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்தில் நூற்றுக்கணக்கான குடிசைகள் எரிந்து நாசமாகின. ஒருவர் காயமடைந்தார்.

விரிசல் ஏதும் ஏற்படாதுஎன்று

பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இக்காடு அழிப்பு நடவடிக்கைகளில் எந்த அளவிற்கு சிறிலங்கா அரசாங்கம் பற்றுக் கோடாக இருக்கப்போகிறது?

காடு அழிப்பதை தடை செய்யும் சட்டத்தை அவசரகாலச் சட்டப் பிரமாணங்களுக்குள் நிறைவேற்றியுள்ள சிறிலங்கா ஜனாதிபதி பதவியா, வாகல்கட, வெலிஓயா குடியேற்றத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கான அமைச்சு மட்ட ஒருங்கிணைப்புக் குழுவொன்றை நியமித்துள்ளார். இதில் பல்வேறு அமைச்சுக்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒவ்வொரு அரசாங்கத் திணைக்களத்திற்கும் தேவையான வசதிகளை அரசாங்கம் செய்து கொடுப்பதற்கும் பணிக்கப்பட்டுள்ளது.

அதாவது தமிழ்ப் பிரதேசத்தில் கூடுதலான காடு காணப்படும் மணலாறு - வெலிஓயாப் பகுதியில் பாரிய குடியேற்றத் திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தியுள்ளது. இதனால் இப்பகுதியில் காடுகள் அழிக்கப்படுவதும் காட்டு மரங்களுக்குத் தீவைக்கப்படுவதும் தற்காலிக நிரந்தர வதிவிடங்கள் அமைக்கப்படுவதும் அரசாங்கத்தின் திட்டமிட்ட நடவடிக்கைகளில் ஒன்றாக அமைகின்றது. அவ்வாறானால் இலங்கை ஒரு நாடாக இருப்பின், அவசரகாலச் சட்டப் பிரமாணங்களின் கீழ் சிறிலங்கா ஜனாதிபதி அறிவித்த காடுகள் அழிப்பதைத் தடை செய்யும் கடுமையான சட்டத்தின் பிரமாணங்கள் என்னாவது?

இதே போன்றே காடுகள் அழிப்போரை அல்லது தீவைப்போரைக்கண்டால் உடன் சுட்டுக் கொல்லுமாறு சிறிலங்கா ஜனாதிபதி பணிப்புரை வழங்கிய ஒரு சில தினங்களில் மணலாற்றுக் காடுகளின் மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள் வீசிய எரி குண்டுகளினால் காடுகள் தீப்பற்றி எரிந்தன பெரும் மரங்கள் முறிந்துவீழ்ந்தன. பல நூற்றுக்கணக்கான ஏக்கர் காடுகள் நாசமாயின. இந்த நிலையில் காடு அழித்தல் சட்டத்தை அமுல்படுத்துபவர்கள் யார்? காடுகளுக்கு தீயிட்ட சிறிலங்கா ஆயுதப்படையினரா? அல்லது முப்படைகளுக்கும் தலைமைத் தளபதியான ஜனாதிபதி அவர்களா பொறுப்பு ஏற்பதுயார்?

சட்டம் மக்களுக்குத்தான் ஆட்சியாளருக்கு அல்ல என்பது மூன்றாம் உலக நாடுகளில் நிலவும் பொதுவான வழக்கம் தான். ஆனால் ஒன்றுக்கொன்று முரணான சட்டங்களும் செயற்பாடுகளும் சிறிலங்கா அரசாங்கம் ஆக்குவதும் நடைமுறைப்படுத்துவதும் சிலவேளை தமது பிரதேசத்தில் அல்ல ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசத்தில் என்ற உணர்வினாலும் இருக்கலாம்.

# பாரதீய ஜனதா பங்கேற்க மறுப்பு

(டில்லி)

பைசாபாத் பகுதியில் வெடிவிபத்து நேர்ந்தது வெறும் சட்டம் ஒழுங்கு விவகாரமே என்று கூறியுள்ள பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி அப்பகுதிக்கு உண்மை கண்டறியும் குழு எதுவும் விஜயம் செய்ய வேண்டியது அவசியமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உள்துறை அமைச்சர் எஸ். பி சவானுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் டாக்டர் ஜோஷி, அயோத்தி செல்வதற்கு உத்தேசித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்குழுவுடனோ, தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சிலுடனோ இணைந்து கொள்வதற்கும் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தூதுக் குழு செல்லும் இடங்கள் குறித்து தாம் வழிகாட்ட முடியாது என்று அமைச்சர் சவான்தெரிவித்துள்ளார். உண்மை கண்டறியும் தூதுக் குழு அயோத்திக்கும், உத்தரப்பிரதேச மாநிலத்திற்கும் விஜயம் செய்வது மத்திய மாநில உறவுகளில் விரிசல் ஏதும் ஏற்படாது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூறியுள்ளது.

இதனிடையே நேற்றுக் காலை ஜனதா கட்சித் தலைவர் எஸ். ஆர். பொம்மை தலைமையிலான உண்மை கண்டறியும் கூட்டுத் தூதுக்குழு புதுடில்லியிலிருந்து அயோத்தி நோக்கிப் புறப்பட்டது.

பள்ளப்பட்டி அகதிமுகாமில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்தில் நூற்றுக்கணக்கான குடிசைகள் எரிந்து நாசமாகின. ஒருவர் காயமடைந்தார். ஒரு குடிசையில் ஏற்பட்ட தீ விரைவாக மற்றக் குடிசைகளுக்கும் பரவியதால் இவ்விபத்து நேர்ந்துள்ளது. தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்படுத்த விரைந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

# ஒரு லட்சம் வாகனங்களுக்கு ஒரு நாள் தடை உத்தரவு

வாகனங்கள் புகை கக்குவதால் சூழல் மண்டலம் அசுத்தமடைவதனைக் கட்டுப்படுத்தும் முகமாக சுமார் ஒரு லட்சம் வாகனங்கள் ஒரு நாள் முழுவதும் ஓடக் கூடாதென சிலி நாட்டு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது

இதனையடுத்து சிலியின் தலைநகர் சண்டியாகோ முழுவதும் ஒரு நாள் வீதிகளில வாகனம் ஓடுவது தடைசெய்யப்படும் 1984 ஆம் ஆண்டு முதல் குளிர் காலத்தில் இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சம் வாகனங்கள் ஒரு நாள் ஓடுவது தடைசெய்யப்படும். வாகனங்களின் கடைசி இலக்கங்களின் அடிப்படையில் தடைசெய்யப்படும் வாகனங்கள் தெரிவு செய்யப்படுகின்றன.

# பிரிட்டன்பொதுத்தேர்தலில் தொழிற்கட்சி முன்னணியில்

(லண்டன்)

பிரிட்டன் பொதுத் தேர்தலில் தொழிற் கட்சி வெற்றி பெற்றாலோ பாராளுமன்றத்தில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை வலு கிடைக்காவிட்டாலோ பிரிட்டன் பிளவு பட்டுவிடும் என்று பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் நாட்டு மக்களை எச்சரித்துள்ளார்.

தேர்தல் பிரசாரத்தில் இறுதிக் கட்டத்தில் மக்களுக்கு விடுத்த வேண்டுகோள் ஒன்றில் அவர் மேலும் சுதந்திர ஜனநாயக வாதிகள் கோரும் அரசியலமைப்பு திருத்தங்களால் ஏற்படக்கூடிய அபாயங்களை காலம் கடந்து போகு முன்னர் உணர்ந்துகொள்ளும்படி வாக்காளர்களைக் கேட்டுக்கொண்டார்.

சென்ற வாரக் கடைசியில் இடம்பெற்ற கருத்துக் கணிப்பில் தொழிற் கட்சி மேஜர் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சியை விட முன்னணியில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# தென் ஆபிரிக்காவில் தனியார்பொலிஸ்

(ஜோகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் நடந்து வரும் கலவரங்களை அடக்க இரண்டாயிரம் பேர் கொண்ட ஒரு தனியார் பொலிஸ் படை உருவாக்கப்படவுள்ளது இதனைக் கறுப்பினத் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

## அருணாசல பிரதேசத்தில்

# பெரும் வெள்ளப் பெருக்கு லட்சக்கணக்கானோர் அவதி

(புதுடில்லி)

அருணாசல பிரதேச மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளப்பெருக்கினால் சுமார் நூற்றி இருபது கிராமங்களில் வாழும் ஏழு லட்சத்துக்கும் அதிகமானோர் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். பல வீடுகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருப்பதுடன் அதிக எண்ணிக்கையிலான மக்களைக் காணவில்லையென்றும் தெரியவருகின்றது.

அருணாசல பிரதேசத்தில் இடைவிடாது தொடர்ந்து பெய்து வரும் மழையை அடுத்து டார்சின் கனா நதியின் அணைக்கட்டுப் பகுதிகளில் வெள்ளம் தேங்கியதை யடுத்து உடைப்பெடுத்துள்ளது.

# 13 லட்சம் வீரர்களுடன் ரஷ்யாவின் ஆயுதப்படை

ரஷ்யா பதின்மூன்று லட்சம் வீரர்களைக்கொண்ட சொந்த ஆயுதப்படை ஒன்றை நிறுவப் போவதாகவும், அண்டை நாடுகளை அது பயமுறுத்தாது என்றும் அமெரிக்காவிடம்கூறியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சென்ற வாரம் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக்ஸ் ஜெனியிடம் ரஷ்ய உதவி பாதுகாப்பு அமைச்சர் இதனைத் தெரிவித்ததாக அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை அதிகாரி தெரிவித்தார்.

இந்தப் பாதுகாப்புப்படை ரஷ்யக் குடியரசு பூராவும் பரவலாக நிலை கொண்டிருக்கும் என்றும், தமது எல்லையில் கனரக தாக்குதல் ஆயுதங்களை இவை கொண்டிருக்க மாட்டா என்றும் ரஷ்யா தெரிவித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## ஆசிய மக்களைக் கவர

# கையெடுத்துக் கும்பிடும் பிரிட்டிஷ் வேட்பாளர்கள்

(லண்டன்)

கையெடுத்துக் கும்பிடும் வழக்கத்தைபிரிட்டனில் வரும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் கடைப்பிடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லண்டன் சண்டே டைம்சில் வெளிவந்த பிரதமர் ஜோன் மேயரின் படம் கும்பிடும் நிலையில் உள்ளது. ஆசிய நாட்டவர்களுக்கே உரிய இந்தக் கும்பிடும வழக்கத்தை பல வேட்பாளர்கள் கடைப்பிடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்தத் தேர்தலில் இருபத்திநான்கு ஆசிய - ஆபிரிக்க வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

ஆசிய மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக இந்தக் கும்பிடும் வழக்கம் பின்பற்றப்படுவதாக அவதானிகள் கருதுகின்றனர். 1981 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 58 தொகுதிகளில் ஆசிய மற்றும் ஆபிரிக்க வம்சாவழி வாக்காளரின் எண்ணிக்கை 15 சத விகிதத்திற்கு மேல் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது 1992 இந்த எண்ணிக்கை மேலும் அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஈழநாதம்

ராஜீவ் இறுதி நிகழ்வு

# வீடியோ நாடா இடைவெளி ஆராய வெளிநாட்டு உதவி

(டில்லி)

முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியின் இறுதி நிகழ்வுகளை பதிவாக்கிய ஒளிப் பதிவு நாடாவில் அவர் சிறிபெரம்புதூர் அரங்கை அடைந்ததன் பின்னர் 19 நிமிடங்கள் வெறுமனேகாணப்படுகின்றன.

இக்கொலை தொடர்பாக விசாரணை நடாத்திவரும் இந்திய மத்தியபுலனாய்வுத்துறை குழுவின் தலைவர் டி. ஆர். கார்த்திகேசன் வர்மா ஆணைக்குழுவின் முன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறிபெரம்புதூர் கூட்டத்தின் பிரதம ஏற்பாட்டாளரான ஏ.ஜே. தாசிடம் இருந்து பெறப்பட்ட வீடியோ நாடா வர்மா ஆணைக்குழுமுன் இயக்கிப் பார்க்கப்பட்டபோதே இவ்விபரங்களை கார்த்திகேசன் கூறினார். மொத்தம் நான்கு நாடாக்கள் இயக்கிப் பார்க்கப்பட்டன.

இந்த 19 நிமிட ஒளிப்பதிவு அழிக்கப்பட்டுள்ளனவா? அவ்வாறு அழிக்கப்பட்டிருந்தால் அவற்றை மீள் உருச் செய்ப முடியுமா என்பது குறித்து ஆராய வெளிநாட்டு நிபுணர்களின் உதவியை கோருவது குறித்து விசாரணையாளர்கள் பரிசீலனை செய்து வருகின்றனர்.

## நிரந்தர அதிபர் நியமனம் பதவி உறுதிப்படுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

டல வருடங்களாக நிறைவேற்று அதிபர்களாக கடமையாற்றி 1-6-89 முதல் நிரந்தர அதிபர் நியமனம் பெற்றவர்களின் பதவிகள் உறுதிப்படுத்தப்படவுள்ளன.

இவர்களுக்கான தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டபின்னரே அவர்களது தற்போதைய பதவிகள் உறுதிப்படுத்தப்படவுள்ளன.

இதற்கான நேர்முகப் பரிசீலனை கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளது. இதன்படி மருதனார்மடம் கோட்டத்தில் இம்மாதம் 14 ஆம் திகதியும் பண்டத்தரிப்புக் கோட்டத்தில் 16ஆம் திகதியும் சாவகச்சேரிக் கோட்டத்தில் 19ஆம் திகதியும் பருத்தித்துறைக் கோட்டத்தில் 20 ஆம் திகதியும் யாழ், வேலணைக் கோட்டங்களில் 21 ஆம் திகதியும் நண்பகல் ஒரு மணியளவில் நடைபெறவுள்ளன.

இதே தினங்களில் காலை ஒன்பது மணிக்கு அந்தந்தக் கோட்டக் கல்வி அலுவலகத்தில் இடமாற்ற சபை கூடி ஆசிரியர்களின் ஏற்றத்தாழ்வுகளைச் சமன் செய்யும் எனவும் யாழ். பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (ச)

## வெளிவாரிப் பரீட்சை

1990/91 பதிவு செய்தமுதல்கலை, முதல் வர்த்தக வெளிவாரி மாணவர்களுக்கான பரீட்சை இவ்வாண்டு செப்ரெம்பர், ஒக்டோபர் மாதங்களில் நடைபெறுமென வெளிவாரிப்பட்டப்படிப்பு இணைப்பாளர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் அறியத் தருகின்றார்.

## முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கல்விக்கோட்ட ஆசிரியர்களுக்குச் சென்ற மாதம் 21, 22 ஆகிய தினங்களில் நடைபெற்ற முதலுதவிக் கருத்தரங்குகளின் தொடர்ச்சியாகக் கருத்தரங்கும், செயலமர்வும் வரும் 15 16 ஆம் திகதிகளில் காலை 8 முதல் பி. ப 4 மணி வரை நடைபெறவுள்ளன. யாழ். சென்ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறவிருக்கும் இவ் வதிவிடக் கருத்தரங்கில் முன்பு கலந்து கொண்டவர்களும், புதிதாகக் கலந்து கொள்பவர்களும் கலந்து கொள்ளலாம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புலேந்திரனின் செய்திக் குறிப்பொன்று இத் தகவலைத் தெரிவிக்கின்றது.

## 13 மாவட்டங்களுக்கு வரட்சி நிவாரண உதவி

(கொழும்பு)

பதின்மூன்று மாவட்டங்களுக்கு இந்த மாதம் வரட்சி நிவாரண உதவி வழங்கப்படவிருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு போகங்களின் போதும் பயிர்செய்கை இல்லாமல் பாதிக்கப்பட்டவர்கள் மாதாந்தம் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவிற்கும் குறைவான மாதாந்த வருமானத்தை பெறுபவர்கள் அல்லது எந்த விதமான உதவியும்அரசாங்கத்திடம் இருந்து பெறாதவர்கள் ஆகியோருக்கே இந்த நிவாரணம் வழங்கப்படும் என்றும் சமூக சேவைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மொனராகலை, திருக்கோணமலை, பதுளை, புத்தளம், வவுனியா, அநுராதபுரம், மன்னார், அம்பாந்தோட்டை, மாத்தறை, குருநாகல், கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் வரட்சியால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படும்.

பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் நிவாரணம் வழங்குவதற்கு 600 கோடி ரூபாய் தேவைப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலியும் நினைவுநாள் அழைப்பும்



வீரவேங்கை கயா
(தவநாயகம் பவானி)
புன்னாலைக் கட்டுவன் வடக்கு

தாயின் மடியில் :
16 - 0 - 7.

தாயக மண்ணில் :
20 - 03 - 9.

திதியும் நினைவுநாளும்
08 - 04 - 92

ஊரெல்லாம் போற்ற உயர்போரில் மிளிர்ந்தனையே
பாரெல்லாம் போற்ற பகைவரை அழித்தனையே
வேறொன்றுமில்லாத உன்வாழ்வு சிதைந்ததனை
ஓராண்டு சென்றாலும் எம் நெஞ்சம் மறந்திடுமா?
நினைவுநாளாகிய இன்று ...

தமிழகச் சிறைகளில்

## உண்ணாவிரதமிருப்போரை பார்வையிட அனுமதி

(சென்னை)

சிறைச்சாலைகளில் உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளைப் பார்ப்பதற்கு வழக்கறிஞர்களை அனுமதிக்குமாறு தமிழ்நாடு சிறைச்சாலை அதிகாரிகளுக்குச் சென்னை உயர் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

சட்ட உதவி மையத்தின் வழக்கறிஞர் ஒருவர் வேலூர் சிறையில் உண்ணாவிரதமிருக்கும் கைதியைப் பார்க்க அனுமதி மறுக்கப்பட்டதாகக் கூறி இந்த மையம் தாக்கல் செய்திருந்த ரிட் மனு மீது தீர்ப்பளிக்கும்போது நீதிபதிகள் கே. எம். நடராஜனும், எம், மருதமுத்துவும் தீர்ப்பளிக்கையில், இந்தப் பொதுவான உத்தரவை வழங்கினார்கள்.

## கர்நாடக அரசின் முறையீடு நீதிமன்றத்தால் தள்ளுபடி

காவிரிநீர் பங்கீடு குறித்து நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கர்நாடக அரசு செய்து கொண்ட முறையீட்டை மேன் முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது]

இனியும் கர்நாடக அரசு காலதாமதம் செய்யாமல் சரியான நேரத்துக்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டும்; மத்திய அரசும் இது குறித்துக் கர்நாடக அரசை வலியுறுத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மாநில சட்டப் பேரவையில் நேற்றுத் தெரிவித்தார்.

## விசாரணை தீவிரம்

உதவிப் பொலிஸ் தலைமையகத்தில் மரணமான உதவிப் பெண் பொலிஸான 23 வயது நிரம்பிய ரேணுகா பிரியங்கனியின் திடீர் மரணத்தில் ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்தியாவிற்கான சேவை ஏயர்லங்கா அதிகரிப்பு

ஏயர்லங்கா நிறுவனம் பம்பாய், திருச்சி, திருவனந்தபுரம், சென்னை, கராச்சி ஆகிய இடங்களுக்கான தனது சேவைகளை அதிகரித்துள்ளது. இதன்படி வாராந்தம் பதினெட்டு சேவைகள் நடாத்தப்படவுள்ளது. நல்ல வசதிகளுடன் கூடிய போயிங் 737, 300 ரக விமானங்கள் சேவை...

தமிழர்

முயற்சிகளையும் சிங்கள அரசுகள் ...

பலாலி

பகுதிகளில்வீழ்ந்து வெடித்தன

இந்த எறிகணைத் தாக்குதலின்போதே இம்மூன்றுபொது மக்களும் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பில்

பாதுகாப்பு அமைச்சர் சட்ட ஆலோசகர், ஓய்வு பெற்ற முன்னாள் நீதியரசர் டி. ஜயலத் உட்பட பாதுகாப்பு படைகளின் உயர் அதிகாரிகள் அரசாங்கத் தரப்பில் கலந்து கொண்டனர்.

தமிழர் குழுக்கள் தரப்பில் புளொட் இயக்கத்தின் சார்பில் அதன் தலைவர் சித்தார்த்தன் உப தலைவர் காவைக் கந்த...

## இன்றைய போட்டிகள்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டசுற்று போட்டியில்;

வலிகாமம் கிழக்குப் பிரிவுக்கான இன்றைய போட்டியில் கலைமதி அணியை எதிர்த்து சென் அன்ரனீஸ் அணி மோதவுள்ளது. இப் போட்டி இன்று மாலை 3. 00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும்.

வடமராட்சிப் பிரிவுக்கான மற்றொரு போட்டியில் நக்கீரன் அணியை எதிர்த்துவல்வை அணி மோதவுள்ளது இப் போட்டி இன்று மாலை 3 00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

மக்களில்லா

முதியவர்கள். இவர்களில் பலர் தாங்களும் தங்கள் குடும்பத்தினருடன் யாழ்ப்பாணம் சென்று வாழ விருப்பம் தெரிவித்துள்ளனர்.

மேலும் அங்கு தங்கியுள்ள மக்கள் அகதிமுகாம்களிலேயே வாழ்கின்றனர். இவர்கள் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை தாம் சுதந்திரமாக நடமாட முடியவில்லை என்றும் தமக்கு வரும் கடிதங்கள் பிரித்துப்பார்க்கப் படுகின்றன என்றும் தெரிவிக்கின்றனர்.

மேலும் அவர் தெரிவிப்பதாவது, தீவுப் பகுதிகளில் விரைவில் வாழ்க்கை பழைய முறைக்கு வந்து விடும் என தாங்கள் நம்புவதாகசிறிலங்கா மூத்த இராணுவ அதிகாரிகள் ...

நான்

இல்லையா என்பதுதான் எனக்கெதிரான தீர்ப்பில் குறிப்பிடப்படும் குற்றச்சாட்டு வியனாராச்சியை, இவ்வழக்கில் முதலாம் எதிரியான காலஞ்சென்ற பொலிஸ் சுப்பிரிடெண்ட் தர்மா ஹல்ஸ்ரொப்பிலிருந்து கைதுசெய்து சென்றார்.

வியானாராச்சி வழக்குசட்ட விசாரணைத் தீர்ப்பு மார்ச் 18, 1991 இல் வழங்கப்பட்டது. மூன்று நீதியரசர்கள் வழங்கிய இந்தத் தீர்ப்புத் தொடர்பாக ஒரு வருடகாலம் மட்டும் அரசு என்ன நடவடிக்கை எடுத்தது. இதன் பிறகும் எனது சேவை நீடிக்கப்பட்டு விசேட நடவடிக்கைப் பிரிவுக்கு டி. ஐ ஜியாகக் கடமையாற்றினேன். அரசு வெளியிட்ட சிறிலங்காவில் மனித உரிமைகள் என்ற அறிக்கையின் படி விசேட நடவடிக்கைப்பிரிவு மூடப்பட்டது. அதன் பிறகு இந்த வருட ஆரம்பத்தில் ஜனாதிபதி பதவியேற்ற ஞாபகார்த்த கொண்டாட்டம் கண்டியில் இடம் பெற்ற போது நானும் விசேடமாக அழைக்கப்பட்டேன்.

வடமேற்கு மாகாணத்திலும், மத்திய மாகாணத்திலும் நான் பொறுப்பதிகாரியாக இருந்த காலத்தில் நான் குற்றம் இழைத்ததாக அரசு குற்றம்காணமுடியாது. விசேட நடவடிக்கைப் பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாக இருந்த நானோ அல்லது எனது பிரிவோ மனித உரிமைகளை மீறவில்லை. எனது பிரிவு பிங்மிங்கோ கிளப்பை முற்றுகையிட்டபோது செல்வாக்கான பெரிய மனிதர்களின் பெயர்களும், உயர் பொலிஸ்அதிகாரிகளின் பெயர்களும் அடங்கிய பெயர்ப்பட்டியல் கைப்பற்றப்பட்டது. ஜோ ஜிம்மின் ஸ்தாபனம் முற்றுகையிடப்பட்டபோது பெரிய மனிதர்களுக்கு எதிரான பல தடயங்கள் சிக்கின.

மத்திய மாகாணத்தில் நான் பொறுப்பதிகாரியாக இருந்த சமயம் கரும் பூனைகள் ஜூலை முதல் நவம்பர் 1989 வரை 830 பேரைக் கொன்று குவித்தார்கள்மத்திய மாகாண இராணுவ தளபதி பதினொரு கொலைகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள எனது உதவியை நாடினார். இராணுவச் சீருடையில் வந்தவர்கள் இந்தக் கொலையைச் செய்வதாக அவர் தெரிவித்தார். மேற்கொண்டு அறிவித்தல் வரும் வரை விசாரணையைப் பின்போடும் படி எனக்குப் பணிப்புரை வழங்கப்பட்டது.

அத்துலத்முதலியும், காமினி திஸாநாயக்காவும் அரசை விட்டு வெளியேறிய பிறகு நான் அவர்களின் ஆதரவாளன் என்ற அடிப்படையில்

நினைவுநாளாகிய இன்று புதன்கிழமைநண்பகல் நீர்வேலி வடக்கில் எமதுஇல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்தில் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகளையும் அன்புடன்அழைக்கின்றோம்.

சி. தவநாயகம் (தந்தை)
த. இராசேஸ்வரி (தாய்)
த. செல்வம் (சகோதரன்) சுவிற்சலாந்து
த, சுரேஸ்குமார் (சகோதரன்) ஜேர்மனி
த. பாமினி (சகோதரி)
த. காயத்திரி (சகோதரி)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(2425)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை பரமசிவன்**
**(கிருஷ்ணகோபால்-வசந்தகுமார்)**

வீரஜனனம்
23 - 09 - 1974
வீரச்சாவு
22 - 03, 1991
திதி
09 - 04 - 1992

தமிழ் மண்ணுக்காய் சிலாபத்துறையதனிலே
சிங்கள பாசறையை உடைத்தெறிய புறப்பட்ட பாலகா, [பரமசிவனே!
நீ எம்மை விட்டு எம் மக்களை விட்டுப் பிரிந்து
ஓராண்டு பூர்த்தியாகி விட்டதே!
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை
என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வங்கி ஒழுங்கை, பெற்றோர், சகோதரி, சகோதரன்
புத்தூர் மேற்கு, உற்றார், உறவினர்
புத்தூர் மட்டுவில் நாடு கிழக்கு
(2411) பூநகரி.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கள் ஒருதலைப்பட்சமாக நிராகரித்துள்ளதுடன் தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவியும் வருகின்றது.

தமிழ் மக்களில் பல இலட்சக் கணக்கானோர் உணவு, மருத்துவம், மற்றும் அடிப்படைத் தேவைகள் கிடைக்காமல் அவதியுறும் வகையில் பொருளாதாரத் தடையை அமுலாக்கும் அதேசமயம் 504 இலட்சம் டாலர்களை பாதுகாப்பு செலவினங்களுக்கு சிறிலங்கா ஒதுக்கியுள்ளமையானது அது போரை நாடிநிற்பதை தெளிவாக்குகின்றது.

தமிழர் பாரம்பரிய பிரதேசத்தின் அடிப்படை அமைப்புக்களைகூட சிங்கள அரசினால் திட்டமிட்ட வகையில் நாசமாக்கப் படுகிறது.

எனவே ஐ. நா. அவையானது ஈழத் தமிழர்கள் பிரச்சினையை ஒரு அவசர பிரச்சினையாகக் கருதி விவாதிக்க வேண்டும் எனவும் தமிழ் மக்கள் சுயாட்சி உரிமையை அங்கிகரிக்கவும், மனிதஉரிமை மீறல்களைத் தடுக்கும் படியும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## நீதி

சழகமும் இணைந்துநீதிவிசாரணை நடத்த வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பி மகிந்த ராஜ பொக்ஸ கோரிக்கை விடுததுள்ளார்.

இதேவேளை அமைச்சர் ரஞ்சன் விஜயரெட்னா கொலை தொடர்பாக மக்களுக்கு இருந்த சந்தேகம் உறுதி செய்யப்படுவதாக கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் கே.வி. சில்வா தெரிவித்துள்ளார்.

ரஞ்சன் கொலை தொடர்பாக தான் விசாரணை செய்ய முற்பட்டதை அரசு தடுத்து விட்டது என முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் உடுகம் பொல தெரிவித்ததைத் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையிலேயே கம்யூனிஸ்ட் கட்சிச்செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

300 ரக விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் ஒவ்வொரு விமானத்திலும் 145 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழரின்

வடிக்கைகளால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் கிராமப் பகுதிகளில் வசித்து வருகின்றனர்.

இக்குடும்ப உறுப்பினர்கள் 90 ஜூன் மாதம் ஆரம்பித்த யுத்த நடவடிக்கையை அடுத்து இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் குடியமர அஞ்சுகின்றனர்.

இந்த அப்பாவிப் பொதுமக்களின் வீடுகளில் புதிதாகச் சிங்கள மற்றும் முஸ்லிம் குடும்பங்களைக் குடியமர்த்தும் வேலையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவத்தின் இந்த நடவடிக்கைக்கு வவுனியா செயலக அதிகாரிகளும் துணை போகின்றனர் என்று செய்தி கிடைத்துள்ளது. [தி]

## குடியேற்றங்களை

கும் தேவையான வசதிகளை செய்து கொடுக்கும்படி அமைச்சரவை பணிக்கப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே இப்பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவம் அடிக்கடி மேற்கொண்டு வருவதும், இப்பகுதிகளில்பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களை வெளியேற்றியிருப்பதும் தெரிந்ததே.

## இருதய

வாண்டில் செயற்படுத்தவேண்டும் என்றும்,

இருதய நோய் ஏற்படாமல் தடுப்பதற்கு உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி மற்றும் புகை, மது பாவனை ஆகியவற்றை தவிர்த்தலே சிறந்த வழியாகும் என்றும் தெரிவித்தார்.

உப தலைவர் காவைக் கந்தசாமி டெலோ இயக்கத்தின் சார்பில் குகன் சாப்பினோ, சுகுமார், கலைக்கப்பட்ட ஈரோஸ் இயக்கத்தின் சார்பில் சுதாமாஸ்டர் ஈ. பி. டி. பி. சார்பில்டக்ளஸ்தேவானந்தா, சிவதாசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின் போது இதுவரை சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயலாற்றிய குழுக்களுக்கு அரசதரப்பினர் நன்றி தெரிவித்தனர். அத்தோடுஎதிர்காலத்தில் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்தும் விரிவாகப் பல மணிநேரம் ஆராயப்பட்டது.

இதேவேளை சிறிலங்கா இராணுவத்திற்கும் அரசாங்கத்திற்கும் ஒத்துழைக்கும் தமிழ்க் குழுக்கள் சட்டத்தையும்ஒழுங்கையும் பேணிநடக்க வேண்டும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க கேட்டுக் கொண்டார்.

கொழும்பு, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் இவர்களால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணையின் போது துன்புறுத்தப்பட்டதாகவும், பணயப் பணம் அறவிடப்பட்டதாகவும் தங்களுக்கு புகார்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தேவையற்ற வேளைகளில் தேவையற்ற ஆயுதங்களுடன் இக் குழுக்களின் உறுப்பினர்கள் நடமாடித் திரிவதாக புகார்கள் கிடைத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

சந்தேகிக்கப்படுபவர்கள் குறித்து இந்தக் குழுக்களுக்கு புகார்கள் ஏதும் கிடைக்குமாயின் சந்தேக நபர்களைப் பிடித்து உடனடியாகவே அருகிலுள்ள பொலிசாரிடம் ஒப்படைக்கும் படியும் விசாரிக்கும் படியும் அதைவிடுத்து சட்டத்தை கையில் எடுத்துக் கொள்ள வேண்டாம் என அறிவுரை கூறியதாகவும் தெரிகிறது.

மூத்த இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் இந்தப்பகுதிகளில் வழமை நிலைமை திரும்பியிருப்பதற்கு உதாரணம் காட்ட இப்போது மீண்டும் செயற்படும் ஊர்காவற்துறை மருத்துவமனை, புதிதாக அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையம், மற்றும் தபால் நிலையத்தை சுட்டிக் காட்டுகின்றனர்.

இதில் விந்தை என்னவென்றால் இந்த வசதிகளை அனுபவிக்க மக்கள் தான் அங்கு இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சென்ற மக்கள் மீண்டும் அங்கு திரும்புவார்கள் என இராணுவம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது என கிறிஸ்தோபர் மொறிஸ் குறிப்பிட்டுள்ளார்.

ளன் என்ற அடிப்படையில் என்மீது எனது எதிரிகள்வஞ்சம் தீர்த்துள்ளார்கள். அதுவரைக்கும் எனக்கும் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் ஒரு சிறிதளவும் பகைமை இருக்கவில்லை. இவ்வாறு அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிவாரி

இருக்கின்றன. முதல் கலை, முதல் வர்த்தகம் அல்லாமல் பொதுக்கலை மாணி பகுதி 1, சிறப்புக்கலை மாணி பகுதி 1 வர்த்தகமாணி 2 ஆம் ஆண்டு என்பவற்றிற்கான விண்ணப்பங்களும் கோர இருப்பதாக வெளிவாரி பட்டப்படிப்பு இணைப்பாளர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்

# அன்னை பூபதியின் 4-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



மீன் பாடும் மட்டு வாவியில்
தென்றலும் புயலாய் பிறப்பெடுத்தது
மாமாங்க மண்ணில்
அன்னை பூபதி சத்திய வேள்வியில்
தன்னுயிர் ஈந்தாள் ஈழப்போரில்

★ ஐங்கரன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
★ ஐங்கரன் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம்
★ ஐங்கரன் மாதர் —லர் வலய அபிவிருத்தி மன்றம்

மட்டுவில், சந்திரபுரம்,
சாவகச்சேரி
(2428)